OS.No. 80/2022 – 01.07.2025

PW2 – மாதையன்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு தமிழ் நன்றாக எழுதப்படிக்கத் தெரியும் என்றால் அரைகுறையாக தெரியும். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை என்றால் சரி. வாதிதான் என்னை சாட்சியம் அழைக்க அழைத்து வந்தார் என்றால் சரி.

இந்த வழக்கின் சங்கதிகள் பற்றி வாதி சொல்லிதான் தெரியும் என்றால் சரி. வாதிதான் பிரதிவாதி சுப்ரமணியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்றால் சரி. அந்த வகையில் வாதி, பிரதிவாதிக்கு இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் பற்றி தெரியும் என்றால் சரி. எந்த வருடம் எந்த மாதம் பிரதிவாதியை வாதி எனக்கு அறிமுகம் செய்து வைத்தார் என்றால் 2021ம் ஆண்டு அறிமுகம் செய்து வைத்தார், மாதம் தெரியாது. அதற்கு முன்னர் பிரதிவாதியை எனக்குத் தெரியாது என்றால் சரி.

தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதி தாவா சொத்திற்கு அருகில் வைத்திருக்கும் சொத்திற்கான சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி எந்த

ஊரை சார்ந்தவர் என்றால் வி.மேட்டுரை சார்ந்தவர். நான் சொல்வது தவறு என்றும் வாதி தருமபுரி மாவட்டம், தருமபுரி வட்டம், குமாரசாமிபேட்டை, 4வது தெரு, கதவு எண்.14சி1 என்ற முகவரியில் வசித்து வருகிறார் என்றும் நான் சொன்னவாறு தாவா சொத்துள்ள முகவரியில் வசிக்கவில்லை என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதி தாவா சொத்துள்ள முகவரியில் வசிப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா ஒப்பந்த பத்திரத்திற்கு முன்னர் 2020ல் வாதிக்கும் பிரதிவாதிக்கும் ஏற்பட்ட ஒப்பந்த பத்திரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். அந்த ஒப்பந்த பத்திரத்திலும் நான்தான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரி. அந்த கிரய உடன்படிக்கை பத்திர எண்.80/2020 ஆக 06.01.2020 தேதியில் பதிவாகி உள்ளது என்றால் சரி. அதன்பிறகு 12.03.2021 அன்று மேற்படி பத்திரம் ஆவண எண்.3031/2021ல் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரி.

முதல் ஒப்பந்த பத்திரத்திற்கு என்ன விலை பேசப்பட்டது என்றால் ரூ.5,00,000/– பேசப்பட்டது. அந்த பத்திரம் 12.03.2021ல் ரத்து செய்யப்பட்டு அன்றைய தினமே ஆவண எண்.3032/2021ல் மற்றொரு பத்திரம் பதிவு செய்தோம். அந்த பத்திரத்தில் கண்ட சொத்தின் சந்தை மதிப்பு எவ்வளவு என்றால் ரூ.12,00,000/– ஆகும்.

பிரதிவாதியிடம் அடமான கடன் பத்திரம் பதிவு செய்வதற்கு பதிலாக அவரை ஏமாற்றும் வகையில் விற்கிரய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்த ரத்து பத்திரத்தில் அதிக தொகை பிரதிவாதி கேட்டதாக சொல்லி சரத்துக்கள் கண்டுள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி தாவா சொத்தை 2018ல் வாங்கினார் என்றும், அந்த வகையில் ஏற்பட்ட கடனை தீர்ப்பதற்காக வாதியிடம் கடன் கேட்பதற்கு முன்பு என்னிடம் கடன் கேட்டு வந்தார் என்றால் ஆம். என்னிடம் கடன் கேட்டு வந்தார். அப்போது நான் எவ்வளவு பணம் கடன் கொடுத்தேன் என்றால் ரூ.4,00,000/- கொடுத்தேன். அதையும் பத்திரமாக பதிவு செய்தேன் என்றால் சரி. அது எந்த வருடம், எந்த மாதம் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி 28.01.2018ல் சொத்தை வாங்கி 6.2.2019ல் என்னிடம் வந்து கடன் கேட்டு கடன் வாங்கினார் என்றால் சரி. அந்த கடனை சரி செய்வதற்காகதான் பிரதிவாதி வாதியிடம் கடன் கேட்டு சென்றார் என்றால் சரி. அதன்பிறகுதான் பிரதிவாதி வாதியிடம் கடன் கேட்டு சென்றார் என்றால் ஆம். ரூ.5,00,000/- கேட்டு ரூ.4,00,000/- கொடுக்கப்பட்டது. என்னிடம் பிரதிவாதி முதன் முதலில் வாங்கிய கடனை செலுத்தி விட்டார் என்றால் சரி. 2019 முதல் பிரதிவாதி, வாதியிடமும் என்னிடமும் கடன் கொடுக்கல் வாங்கலில் இருந்து வந்தார் என்றால் சரி.

பிரதிவாதி படிக்காதவர் என்பதை பயன்படுத்தி அவரிடம் அதிக வட்டிக்கு கடன் கொடுத்து அசலையும் கூடும் வட்டியையும் வசூல் செய்யும் வகையில் மாற்றி மாற்றி விற்கிரய ஒப்பந்தம் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி, வாதியிடம் எந்த விற்கிரய ஒப்பந்தமும் செய்யவில்லை என்றும் அவர் கடன்தான் பெற்றார் என்றால் சரியல்ல. நான் வாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு பிரதிவாதியை ஏமாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.